**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : CC 99/2023**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 14.11.2025.**

| | |
|---|---|
| **Name : குணசீலன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் கொம்பம்புதூரில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். எங்கள் பங்காளி குடும்பம் உள்ளது. சொத்து தகராறு குடும்பத்தில் 10 வருடமாக உள்ளது. எங்களுக்கு பொது கிணறு உள்ளது. கடந்த 14.09.2022ம் தேதி சித்தப்பா செந்தில்குமார் அவர் அண்ணன் செல்வம், அவர் மகன் இளங்கோ ஆவார்கள். அதற்கு வாய்கால் போடும் போது காலையில் எதிரிகள் தடுத்துவிட்டார்கள். நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். பிறகு 15.09.2022ம் தேதி இரவு 8 மணியளவில் வீட்டிலிருக்கும் போது சின்னதாயி கண்டார ஒலி, தெவிடியா பையா என்று கெட்ட வார்த்தையால் பேசினார்.

2) ஏன் இவ்வாறு பேசுகிறீர் என்று கேட்டதற்கு அப்படி தான் பேசுவேன் என்றும் நீ நாசமாக போய் விடுவாய் என்று மண்ணை அள்ளி என் மீது போட்டுவிட்டார். சின்னதாயி மகன் செல்வராஜ் கையால் கீழே தள்ளிவிட்டு இடது கை மீதும், வயிறு, கால் ஆகிய பகுதிகளில் உதைத்தார். செல்வராஜ் மனைவி கௌரி பக்கத்து வீட்டில் உள்ள குமரவேல், குமார், கலைவாணி ஆகியோர் வந்து நகத்தால் எங்களை கீறி ரத்த காயம் ஏற்படுத்தினார்கள்.

3) இதனால் எனக்கு வயிறு, கை, கால் ஆகிய பகுதிகளில் ரத்த காயம் ஏற்பட்டது. அக்கம் பக்கம் உள்ளவர்கள் வந்து விலக்கிவிட்டார்கள். செல்வராஜ் போடி

தெவிடியா என்று என் பாட்டி கந்தாயி என்பவரை கீழே தள்ளியதில் அவருக்கு இ டுப்பு எலும்பில் காயம் ஏற்பட்டது. வலது பெருவிரலில் காயம்பட்டது. பக்கத்தில் உள்ளவர்கள் விலக்கிவிட்டார்கள். இன்றைக்கு இல்லை என்றாலும் என்றைக்காவது சாவு எங்கள் கையால் தான் என்று கல்லை காட்டி கொலை மிரட்டல் விடுத்தார்கள்.

4) காயம்பட்ட என்னை சித்தப்பா மகன் பூபாலன் ஆம்புலன் மூலம் என்னை ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார். எதிரிகள்போகக்கூடாது என்று சொல்லி வழியை தடுத்துவிட்டார்கள். நானும் என் பாட்டியும் சுற்றி சென்று தான் ஓமலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்தார்கள். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். ஆஜர் எதிரிகள் தான் தன்னை அடித்ததாக சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : CC 99/2023**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 14.11.2025.**

| | |
|---|---|
| **Name : பழனிசாமி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சொறையனூரில் குடியிருந்து காய்கறி வியாபாரம் வேலை செய்கிறேன். அ.சா.1 என் உறவினர் ஆவார். எதிரிகளுக்கும் புகார்தாரர் குடும்பத்திற்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. கடந்த 15.09.2022 ம் தேதி இரவு 8 மணியளவில் அ.சா.1 மற்றும் எதிரிகள் அடித்துக் கொண்டதாக சொன்னார்கள். வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 15.09.2022 ம் தேதி அ.சா.1 வீட்டிலிருக்கும் போது சின்னதாயி கண்டார ஒலி, தெவிடியா பையா என்று கெட்ட வார்த்தையால் பேசினார் என்றால் எனக்கு தெரியாது. ஏன் இவ்வாறு பேசுகிறீர் என்று அ.சா.1 கேட்டதற்கு அப்படி தான் பேசுவேன் என்றும் நீ நாசமாக போய் விடுவாய் என்று மண்ணை அள்ளி அ.சா.1 மீது போட்டுவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. சின்னதாயி

மகன் செல்வராஜ் கையால் கீழே தள்ளிவிட்டு இடது கை மீதும், வயிறு, கால் ஆகிய பகுதிகளில் உதைத்தார் என்றால் எனக்கு தெரியாது. செல்வராஜ் மனைவி கௌரி பக்கத்து வீட்டில் உள்ள குமரவேல், குமார், கலைவாணி ஆகியோர் வந்து நகத்தால் எங்களை கீறி ரத்த காயம் ஏற்படுத்தினார்கள் என்றால் எனக்கு தெரியாது.

3) இதனால் அ.சா.1 க்கு வயிறு, கை, கால் ஆகிய பகுதிகளில் ரத்த காயம் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. செல்வராஜ் போடி தெவிடியா என்று கந்தாயி என்பவரை கீழே தள்ளியதில் அவருக்கு இடுப்பு எலும்பில் காயம் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. பிறகு என்றைக்காவது சாவு எங்கள் கையால் தான் என்று கல்லை காட்டி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிகளுக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : CC 99/2023**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 14.11.2025.**

| Name : ஜெயா | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் திண்டமங்கலத்தில் குடியிருந்து காய்கறி வியாபாரம் வேலை செய்கிறேன். அ.சா.1 என் கொழுந்தனார் ஆவார். காயம்பட்ட கந்தாயி என் மாமியார். என் மாமியார் இறந்துவிட்டார். 15.09.2022ம் தேதி இரவு 8 மணியளவில் குணசீலன் அவர் வீட்டிலிருந்த போது சின்னதாயி அங்கு வந்து அ.சா.1ன் விட்டிலிருந்த செந்தில்குமாரை கெட்ட வார்த்தையால் திட்டியதாகவும் எதற்காக திட்டுகிறாய் என்று அ.சா. 1 கேட்டதற்கு சின்னத்தாயி மண்ணை எடுத்து வாறி அ.சா.1ன் மீது போட்டு திட்டியதை கேள்விப்பட்டேன்.

2) ஆஜர் எதிரிகள் அ.சா.1யை கெட்ட வார்த்தையால் பேசி கீழே தள்ளி விழுந்தவரை எதிரிகள் செல்வகுமார், கௌரி இருவரும் கீழே தள்ளி உதைத்துவிட்டார்கள். அதன் பின்னர் குமார், கலைவாணி ஆகியோரை எதிரிகள் அடித்துவிட்டார்கள். சண்டையை தடுக்க வந்த மாமியாரை எதிரிகள் கீழே தள்ளியதில் இடுப்பு எலும்பு உடைந்துவிட்டது. தற்போது என் மாமியார் கந்தாயி இறந்துவிட்டார்.

3) குணசேகரன், இளங்கோ எனக்கு தகவல் சொன்னார்கள். தகவல் தெரிந்து அ.சா.1ன் வீட்டிற்கு வந்துவிட்டேன். அ.சா1 மற்றும் கந்தாயி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார்கள். ஆஜர் எதிரிகள் தான் அடித்தார்கள் என்று சாட்சி

திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை 17 ம் தேதி விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை—**</u> இல்லை.

**ஒம்/— தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**